www.padippakam.com

# தலைவி

இணைந்த கரங்கள்
பெண்கள் விழிப்புணர்ச்சி
இணையங்களின் ஒன்றியம்
செய்திமடல்

செங்கோல் 2 மன்றம் 4

பெப்ரவரி 2004

## தலைவியின் பார்வையில்............

நாம் இந்த செய்திமடலில் எதிர்வு கூறியதுபோலவே பாராளுமன்றத் தேர்தல்கள் வந்துவிட்டன சகோதரிகளே. தேர்தலில் போட்டியிட நான் நீ என முண்டியடிக்கத் தொடங்கிவிட்டனர் அரசியல்வாதிகள். இந்தத் தேர்தல்கள் அவசரத் தேர்தல்களாகும். வட-கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழர் ஒரே குரலில் ஒற்றுமையைப் பறைசாற்றும் தேர்தல்களாகும். குறுகிய காலத்துக்கான அரசினைத் தாபிக்கத்தான் இந்தத் தேர்தல்கள் என்று பலர் கூறுகின்றார்கள். சமாதான பேச்சுக்களை முன்னெடுக்கும் முறை வழியினை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவு நல்கும் தமிழ் கூட்டமைப்பினை மட்டும் வேண்டும் உபாயம் கொண்ட தேர்தல்களாகும். எனவே இதில் வேறு விடயங்களை எடுக்க வாய்ப்புக்கள் இல்லை. அதனால்தான் வேட்பாளர் பட்டியலில் பெண் பிரதிநிதித்துவம் தேவை என்கின்ற இணைந்த கரங்கள் வலையமைப்பின் கோஷத்தை உக்கிரமாக நாம் எடுக்கவில்லை.

ஆனால், அப்படியிருந்தும்கூட, இத்தேர்தல்களையொட்டி பெண்களின் பொறுப்புக்கள் ஒழிந்துவிடவில்லை. தெற்கில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வந்தால் என்ன, ஜேவிபி சுதந்திரக் கட்சி இணைந்த புதிய மக்கள் அணி வந்தால் என்ன, பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் நிலைப்பாடும் நோக்கமும் எதுவாக இருக்க வேண்டுமென்று நாம் ஆலோசித்திருக்க வேண்டிய நேரமிது.

நடக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் புலிகளுக்கு அதிகச் சலுகைகளைக் கொடுத்துவிட்டது. ஆகவே ஜேவிபி போன்ற புரட்சிக் கட்சிகள் வந்து இன்னும் கடுமையான போக்கைக் கடைப்பிடித்து புலிகளுடன் தங்களுக்கு நீதியான உடன் படிக்கையைக் கைச்சாத்திடவேண்டும் என்று நம்பிக்கை வைத்து பெரும்பான்மை சிங்களவர்கள் இத்தேர்தலில் அம்மையாரின் கூட்டணிக்கு வாக்களிக்கப் போவதாக ஆய்வு நிறுவனங்கள் எடுத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ஒருபுறமிருக்க, சிறுபான்மையினரைப் பகைத்து, கிறிஸ்தவர்களையும் பகைத்து விட்டதால் புதிய கூட்டணி அரசாங்கத்தை அமைக்க முடியாது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். கடந்த ஆண்டில் தென்பகுதியில் 130 தேவாலயங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஜேவிபியின் கை தெட்டத் தெளிவாகத் தெரிந்திருக்கின்றது.

எது எப்படியிருப்பினும் இரு பிரதான கட்சிகளும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுதல் நடக்க முடியாத காரியமாகும் என்பது வெள்ளிடை மலையாகத் தெரிகின்றது. தேர்தல்களுக்குப் பின்னரும் இப்போதிருப்பதைப் போலவே ஒரு பலவீனமான அரசாங்கமும் ஜனாதிபதியாக சந்திரிகாவும் (2006 வருட முடிவு வரைக்கும் அவர் தானே ஜனாதிபதி) இருந்தால் தற்போது குழம்பிய சமாதான முறைவழி என்னாகின்றதோ என்று கலங்கத்தான் தோன்றுகின்றது. ஏனெனில் இன்று கையுடைந்த நிலையை பிரதமருக்குக் கொடுத்த அதே காரணிகள் பின்னரும் காணப்படுமல்லவா? இதே சமயம், இத்தேர்தல்களில் தோல்வியுற்றவர்களின் தலைமைத்துவம் சவாலுக்குள்ளாக்கப்படும் என்றும் பலர் கூறுகின்றனர். அதாவது இத்தேர்தல்களில் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது சந்திரிகாவோ தோல்வியைத் தழுவிக் கொண்டால் அவர்கள் தங்கள் தலைமைத்துவப் பதவிளைத் தக்க வைத்துக் கொள்வது மிகவும் கடினமாக இருக்கும் என்கின்றனர். சிங்கள அரசியல் வானில் நேர்மை மிக்க இரண்டாம் நிலை அரசியல் தலைவர்கள் யாரும் எங்கள் கண்ணுக்குத் தென்படாதபோதும், திரு கரு ஜயசூரிய போன்றவர்கள் தலைமைப் பதவியை ஏற்பது வரவேற்கத்தக்க மாற்றமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இவ்வாறு, திசை தெரியாமல் தத்தளிக்கும் சிங்கள அரசியலில் தமிழ் பேசும் மக்களாகிய நாம் என்ன நிலைப்பாடுகளை எடுக்கலாம்? சமாதான முறைவழியை முன்னெடுக்க யாருடன் என்னென்ன நடவடிக்கையை எடுக்கலாம்? சிங்கள அரசியல்வாதிகளுடன் எமது நடவடிக்கையெனில் யார் எவருடன்? அல்லது அங்குள்ள புத்திஜீவிகளுடனா? பொது மக்களுடனா? என்ன கோரிக்கையைக் கோஷத்தை என்ன முறைகளில் வைக்கப் போகின்றோம்? சகோதரிகளின் கருத்துக்களை வரவேற்கின்றோம். உங்கள் சிந்தனையில் உதிக்கின்றது எதுவானாலும் எழுதுங்கள். அடுத்தடுத்த தலைவிகளில் இக்கருத்துக்களுக்கே முழுப்பக்கங்களையும் ஒதுக்குகின்றோம். இக்கருத்துப் பரிமாறல்களில் எங்கள் அரசியல் வாதிகளுக்கு நாம் வழங்கக்கூடிய பயன்மிக்க ஆலோசனைகள் தோன்றலாம்.

**துணிந்தெழுங்கள், வெற்றி கொள்ளுங்கள்!**
**பெண்களின் எழுச்சி! சமூகத்தின் உயர்ச்சி!**

வாழ்த்துக்களுடன்,
ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com



## செய்திச் சிதறல்கள்

- இப்போதைய பாராளுமன்றத் தேர்தல்கள் முடிவடைய, இனிவரும் காலங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறப்போகின்றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு அங்கத்தவர்களாகிச் சேவை செய்ய விரும்பும் பெண்களுக்கு ஒரு நற்செய்தி. விழுது நிறுவனம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் பங்குகொள்ளவும், அம்மன்றங்களில் சேவையாற்றவுமான பெண்களுக்கான பயிற்சித் திட்டங்களை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது. இப்பயிற்சித் திட்டங்களில் கலந்து கொள்ளவிரும்புபவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாகத் தலைவியுடன் தொடர்பு கொள்ளுங்கள். விண்ணப்பங்களின் எண்ணிக்கை, அது வந்த இடங்களைப் பொறுத்து, இப்பயிற்சிகள் எங்கே நடைபெறப் போகின்றன என்பதை நாம் உங்களுக்குப் பின்னால் அறிவிப்போம். விண்ணப்பங்களை ஏப்ரல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

- கவரொட்டிச் சித்திரம் வரைவதற்கான பயிற்சியைப் பற்றி நாம் சென்ற இதழில் அறிவித்திருந்தோம். ஆனால் அதற்கு ஆறு பேர்களே விண்ணப்பம் செய்திருந்தனர். பயிலுனர்கள் போதாத காரணத்தினால் இந்தப் பயிற்சியை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடத்தலாம் என்று தீர்மானித்துள்ளோம். இதில் வேறு யாராவது பங்குபற்ற விரும்பினால் எங்களுக்கு விண்ணப்பங்களை அனுப்பவும்.

## பிரதேச சபைத் தலைவராக இருந்த ஒரே பெண்மணி

"முதலில் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அந்த மக்கள் உள்ளவும் உங்களுடன் நிற்பார்கள்" என்று கூறுகின்ற திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் அவர்கள் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவராவர். பொறுப்பு, அடக்கம், அறிவு இவற்றின் உருவமாகத் திகழ்கின்றார். பின்னே, இவர் தலைவராக இருந்தபோது வலிகாமம் வடக்கு பிரதேச சபை யாழ்ப்பாணத்திலேயே மிகச் சிறந்த முறையில் இயங்கும் பிரதேச சபையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது என்ன சும்மாவா? அது மட்டுமல்லாது இச்சபை வட−கிழக்கு மாகாணத்திலேயே இரண்டாம் இடத்தினைத் தட்டிக் கொண்டது.



உங்கள் வெற்றியின் இரகசியம் என்னவென்று கேட்டோம். நேர்மை என்று பளிச்சென்று அவரிடமிருந்து வந்தது. எங்கள் பிரதேச சபையில் வெளிப்படைத்தன்மை பேணப்பட்டது. ஒளிவு மறைவின்றி எல்லாவற்றையும் நாம் கலந்தாலோசித்தோம். ஒருமுறை கணக்காய்வில் ரூ 62,000 குறைவாகக் காட்டப்பட்டபொழுது, அது ஒரு காணி விலை மதிப்பீட்டில் நிகழ்ந்த தவறுதல் என்று கண்டபோதும் நாம் அங்கத்தவர்கள் எல்லோரும் எங்கள் சொந்தப் பணத்தைப் போட்டுக் கணக்கை அடைத்தோம் என்கிறார். அங்குள்ள அங்கத்தவர்களின் நேர்மை மெச்சத்தக்கதென்றாலும், பாலாம்பிகையின் நேர்மையான தலைமைத்துவமும் அவர்களின் ஆர்வத்தில் மிகவும் முக்கிய பங்கை வகித்தது என்று சொன்னால் மிகையாகாது. இவ்வளவு வெளிப்படைத்தன்மையை இந்தக் காலத்தில் நாம் எங்கு காண்போம்?

பாலாம்பிகை அரசியலில் நுழைந்த விதம் என்னவோ அவர் கணவர் மூலமாகத்தான். திரு ஸ்ரீபாஸ்கரன் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு பிரதேசசபைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். கிராம அபிவிருத்திச் சபை, லயன் கழகம், சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கம் போன்ற பொது நிறுவனங்களில் சேவையாற்றி வந்த அவருக்கு இது இலகுவாக இருந்திருக்கும். அவர் இறந்ததற்குப் பின்னரே திருமதி பாலாம்பிகையை பிரதேச சபைத்தலைவராக இருக்க மக்கள் கோரினர். யாழ் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட காலம். பாலாம்பிகைக்கு அருகிலுள்ளோரெல்லாரும் இப்பதவியை ஏற்காதே என்று அச்சமூட்டினர். அச்சுறுத்தல் கடிதங்கள்கூட வந்தன. ஆனால், கணவர் விட்டுச் சென்ற சேவையைத் தொடரவேண்டுமென்ற ஆவல் உந்தித்தள்ள, சொந்த அண்ணன் கொடுத்த உற்சாகம் பக்கபலமாக, பாலாம்பிகை இப்பாரிய பொறுப்பை ஏற்றார்.

2000ம் ஆண்டு மே மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இக்கடமை 2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிரதேச சபைகள் கலைக்கப்படும்வரை தொடர்ந்தது. பிரதேச சபையுடன் மட்டும் நின்றுவிடாது, கிராம அபிவிருத்திசபை, துர்க்கையம்மன் பெண் தொண்டர்கள் குழு ஆகியவற்றிலும் அங்கத்துவம் வகித்து அப்பிரதேச மக்களுக்கு அருஞ்சேவையாற்றினார். ஆற்றிக்கொண்டும் வருகின்றார். இவரின் தலையீட்டினால் தெல்லிப்பளை மகாஜன கல்லூரியில் இராணுவ உள்வீடு தடுக்கப்பட்டது. கீரிமலைக்கு தண்ணீரும் மலகூடங்களும் வழங்க ஏற்பாடுகள் செய்தார். மற்றும் பல கிராமங்களில் பாதைகள், மின்சார வசதி, நீர் விநியோகம், மோட்டார் பௌஸர் நீர் விநியோகம், உழவு இயந்திரம் ஆகியவற்றை வழங்கினார். புற்றுநோய் வைத்தியசாலையைத் திருத்தியமைக்க அரச அதிபரினூடாக ரூ 300,000 இவருடைய மேற்பார்வைக்குக் கீழ் கொடுக்கப்பட்டது. இது அரச அதிபர் இவர் மீது வைத்திருந்த அபிமானத்தைக் குறிப்பதாயிற்று.

பெண்கள் அரசியலில் நுழைந்தால் மாற்றங்கள் நிறைய உண்டு என தனது வாழ்க்கை மூலம் நிரூபித்த திருமதி பாலாம்பிகைக்கு எங்கள் நன்றி கலந்த வாழ்த்துக்கள் உரித்தாகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



## சபாஷ், ஹியூடெக் பெண்களே!

ஹியூடெக் பெண்கள் அமைப்புக்களின் ஒன்றியம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் பெண்களும் சேர்க்கப்படவேண்டும் என்று கோரிக்கை விட்டிருக்கின்றது. பாராளுமன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டவுடனேயே செயலில் இறங்கி இணைந்த கரங்கள் வலையமைப்பிற்குப் பெருமை சேர்த்திருக்கின்றது!

இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்த வேளையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியல் தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று அறிகின்றோம். இப்பட்டியல்களில் மாவட்டத்திற்கொரு பெண்ணாக அவர்கள் நியமனப் பத்திரங்கள் கொடுக்கப் போவதாக வதந்திகள் உலாவுகின்றன. ஐம்பது வீதம் கேட்டுக்கொண்டிருக்கும் எங்களுக்கு இது இறைச்சியல்ல, எலும்புத் துண்டுதான். ஆனால், இந்த முறையும் இவ்வளவு குறைவாகத்தான் பெண்கள் அரசியலுக்குள் நுழைகின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் நாம்தான். நாங்கள் செயலிழந்து இவ்வளவு காலமும் இருந்ததுதான் சகோதரிகளே.

கடந்த காலத் தலைவி இதழ்களைத் திருப்பி வாசித்துப் பார்த்தீர்களென்றால் நாம் சொல்லுவது புரியும். பெண்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டுமென்ற நோக்கத்துடன் எத்தனையோ யுக்திகளையும் கருத்துக்களையும் தெரிவித்திருந தோம். நாமறிய, ஒரு மாவட்டத்திலும் ஒரு பெண்கள் குழுவும் அவற்றில் ஒன்றைத்தானும் செயற்படுத்த முன்வரவில்லை. நாங்கள் என்ன செய்து என்ன நடக்கப் போகின்றது என்கின்ற சோர்வும் சோம்பலும்தான் இதற்கு மூலகால். உண்மைதான், எமது கீழ்நிலைக்கு நாம்தானே காரணம்?

### தமிழ் தேசிய கூட்டமைப்பினர்களுக்கு பெண் வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்த வேண்டுகோள்

10.02.04
செயலாளர்,
தமிழ் தேசிய கூட்டமைப்பு.

எமது தாய்திரு நாட்டில் தமிழ் மக்களாகிய எமது இன்றைய தேவையை கருத்தில் கொண்டு நீங்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஓர் அமைப்பாக தேர்தலில் நிற்பதற்குத் தீர்மானித்ததைமிட்டு மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றோம்.

தமிழர் இக்கட்டான காலகட்டத்தில் பிரிந்து நிற்பது எமக்கு பெரும் சாபக்கேடாகும். எனவே ஒரு குடையின் கீழ் ஒன்று சேர்ந்து போட்டியிடுவது வரவேற்கத்தக்கது மட்டுமல்லாது, வரலாற்றின் தேவையுமாகும்.

அதேவேளை விடுதலை, ஒன்றிப்பு, சமாதானம், சமூகமேம்பாடு ஆகியவற்றில் சமவலுவுள்ள பெண்களை அரசியலிலும் இணைத்து பெண்விடுதலையையும், சமத்துவத்தையும் வலியுறுத்தும் வகையில் பெண்வேட்பாளர்களையும் நியமிக்கும்படியாக கேட்டுக்கொள்கின்றோம். எமது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் யாழ் குடாநாடு முழுவதும் பரந்த அளவில் இயங்கும் 3800 அங்கத்தினரைக் கொண்ட 46 பெண்கள் அமைப்புக்கள் மூலம் எமது முழு ஆதரவையும் வழங்குவதற்கு ஆயத்தமாகவுள்ளோம்.

செயலாளர்,
கியூடெக் பெண்கள் அமைப்புக்களின் ஒன்றியம்.

## பெண்கள் மீதான வன்முறையைப் பற்றிய உலக வலம்

### கரிபியன் தீவுகள்

கரிபியன் தீவுகளில் 1985ல் 414 ஆகத் தெரிவிக்கப்பட்ட குடும்ப வன்முறைச் சம்பவங்கள் 1991ம் ஆண்டு 2175 ஆக உயர்ந்தன.

ட்ரினிடாடிலும் டொபாகோவிலும் காவல் நிலையங்கள் 1991ம் ஆண்டு 1517 குடும்ப வன்முறைச் சம்பவங்களைப் பதிவு செய்திருந்தன. 1993ல் 1444 பாலியல் வன்முறை மற்றும் வன்முறைச் சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

### தென்பசுபிக்

பபுவா நியூகினியில் 1981ம் ஆண்டு கொலை செய்யப்பட்டவர்களில் 60 வீதமானோர் பெண்களாக இருக்கக் காணப்பட்டனர். இதில் பெரும்பான்மையோர் குடும்பச் சண்டைகளின்போது தங்களது கணவன்மார்களாலேயே தாக்கப்பட்டனர்.

உலக உணவு ஸ்தானத்தின் அறிக்கையொன்றின்படி, நியூஸிலாந்தின் ஐந்து மாவட்டங்களில் பேட்டி காணப்பட்ட 314 பெண்களில் 20 வீதமானோர் தாம் தங்களது கணவன்மார்களாலோ அல்லது காதலர்களாலோ தாக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

*உலக வலம் தொடர் முற்றுப் பெற்றது*

## திருகோணமலையும் பெண்களின் உயர்வும்

தமிழ் ஈழத்தின் தலைநகர் என போற்றப்படும் திருகோண மலையில் என்றும் பெண்களுக்கு முன்னுரிமை பலவேறு துறைகளில் வழங்கப்பட்டு வந்ததை நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும். 1950ம் ஆண்டுக்காலப்பகுதியிலேயே உப்பு வெளியில் சிவானந்த தபோவனம் என்ற ஆன்மீக நிலையத்தில் பெண்பிள்ளைகள் கல்வி கற்பதற்கு ஒழுங்கு செய்து கொடுத்ததோடு. வறுமைக்கோட்டில் வாழ்ந்த ஆதரவற்ற அப்பிள்ளைகளின் உணவு உடைஇருப்பிட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இதற்கு முன்னின்று உழைத்தவர் மாதாஜி என்ற பெண் ஆன்மீகவாதி.

இதேபோல பெண்பிள்ளைகளின் கல்விவளர்ச்சிக்கு சண்முகா சைவ மகளீர் கல்லூரியை தன் சொந்தக்காணியில் அமைத்தக் கொடுத்தவர். திருமதி தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்கள் அத்தோடு துாரஇடங்களில் இருந்து வரும்பிள்ளைகளுக்கு அக்கல்லூரியிலே விடுதி வசதிகளும் செய்து கொடுத்தார். இத்தகைய பணிகளை திறம்பட செய்ய முன்னின்று உழைத்தவர்களுள். அமரரான ஓய்வு பெற்ற நீதியரசர் நா.கிருஷ்ணதாசன் B.A (Hons) LLB Advacate அவர்களும் ஒருவராவார்.

இதே போல நகராட்சி மன்ற தலைவியாக இருந்து செல்வி. சரஸ்வதி சுவாமிநாதன் மற்றும் சிவயோக சமாஜத்தின் பெண்களின் சேவை, மற்றும் தம்பலகாமம் சாரதா வித்தியாலயம், மூதூர் சாரதா பெண்கள் நிலையம், திருகோணமலை மகளிர் அமைப்பு என்பன இம்மாவட்டத்தின் பெண்களின் உயர்வுக்காக பாடுபட்டு உழைத்து வந்தன வருகின்றன.. இதில் காந்தி சேவா சங்கமும் தன் பங்களிப்பை செய்து வருகின்றன.

மகேந்திரன் என். ஆர் 37, ஔவையார் வீதி,
திருகோணமலை

படிப்பகம்

www.padippakam.com



# ‘வேரடி மண்’ பெண்கள் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சி

ஜனவரி மாதம் யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (TRRO) அம்மாவட்டத்திலுள்ள பதினொரு கிராமங்களில் “வேரடி மண்” என்னும் பெண்கள் சிறப்பு நிகழ்ச்சியை நடத்தினார்கள். தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுக்களைத் திரும்ப அகழ்ந்தெடுத்து அதைப் பெண்கள் விளையாடிப் பார்ப்பதுதான் வேரடி மண் நிகழ்ச்சியாகும். இது தாவடி தெற்கு, கரம்பைக் குறிச்சி, வரணி,கைதடி, நாவற்குழி தெற்கு, நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்டம், தச்சந்தோப்பு, கோயிலாக்கண்டி, ஏழாலை தெற்கு, பிரான்பற்று, கைதடி ஊரியான், நாவற்குழி கிழக்கு ஆகிய கிராமங்களில் நடைபெற்றது.



இன்று போர் ஓய்ந்திருக்கின்றது. இந்த நிலையில் பௌதிக நிலை சார்ந்த அபிவிருத்தியை மட்டும் சிந்திக்காது மனதிற்கான புனர்நிர்மாணத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்று இந்தப் பணியை ஆரம்பித்தனர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர். சமூக மனப்பிறழ்வு நிலையைச் சீர் செய்வதற்கு சுமைத் தணிவை ஏற்படுத்துவதற்கு எமது பண்பாட்டில் பல நல்லவைகள் கிடந்தன. அவற்றை நீண்ட இடப்பெயர்வு மற்றும் வாழ்க்கைச் சுமைகளால் நாம் மறந்து விட்டோம். வயல்வெளி, தெருவோரம் எங்கும் எந்நேரமும் முளைத்து எமக்குத் தெம்பூட்டும் விளையாட்டுக்களை மீளவும் விளையாட ஆரம்பித்து வைக்கின்றோம், என்கின்றனர். அதற்குத் தமிழர் தம் வேர்களைத் தேட வேண்டியதாக இருக்கின்றது என்கின்றனர். அதனால்தான் இப்பாரம்பரிய விளையாட்டுக் களத்துக்கு வேரடி மண் எனப் பெயரிட்டனர்.



விளையாட்டு என்றால் நம் மனக்கண் முன் வந்து நிற்பது என்ன? ஓடுவதும், குதிப்பதும், பாய்வதும் என சுதந்திரமான அங்க அசைவுகளே. பெண்களைப் பற்றி ஏதும் வசை வார்த்தைகள் வருமுன்னரே அதைத் தடுக்க அவர்களின் நடமாட்டத்தை சமூகம் மட்டுப்படுத்திற்று. அப்படிச் சமூகம் தங்களுக்கு விதித்த வரையறைகளையும் தாண்டி வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்கள் சுதந்திரமாக வெளியில் கால் வைக்க வேரடி மண் உதவுகின்றது.



ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு முழு நாள் இவ்விளையாட்டு விழாவுக்காக செலவிடப்பட்டது, அதற்காக பல நாட்கள் முன்னாயத்தங்கள் நடைபெற்றன. பாரம்பரிய விளையாட்டுக்களுக்கான இட ஒழுங்கமைப்புக்கள் கூட பாரம்பரிய முறைப்படி ஒழுங்கு செய்யப்பட்டன.நெல்லடிக்கும் படங்குகளைக் கொண்டு அமைக்கப்பட்ட கொட்டகைகளில் தரையில் அமர்ந்து மக்கள் பார்க்கக்கூடியதாக ஊரின் மத்தியில் உள்ள இடம் தயார் செய்யப்படுகின்றது. அதிகமான சிற்றூர்களில் கிளித்தட்டு முக்கியமான விளையாட்டாகக் காணப்பட்டாலும் ஒவ்வொரு ஊர்களும் தனக்கென சிறப்பு விளையாட்டுக்களையும் கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. விளையாட்டுக்கள் நடந்து கொண்டிருந்தபோது கூடியிருந்த முதியவர்கள் தமது பழைய நினைவுகளை மீட்டி மகிழ்ந்தார்கள். அவ்வாறு அவர்கள் மீட்டி மகிழும்போது மேலும் பல விளையாட்டுக்களை இனம் காட்டினார்கள். இதுவரை அறுபதுக்கு மேற்பட்ட விளையாட்டுக்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் தொகுத்திருக்கின்றனர்.

## கூட்டுறவுச் சங்கங்களுக்குள் பெண்கள் அங்கத்துவம் வகிக்கின்றனரா?

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வட–கிழக்குப் பிரதேசங்களின் மக்களின் வாழ்க்கையில் மிக முக்கியமான பங்கை வகித்தன என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. குறிப்பாக வடக்கில், பொருளாதாரத் தடை அமுலில் இருந்த காலத்தில் மக்கள் உயிர் வாழ அத்தியாவசியமான பொருட்களையெல்லாம் இச்சங்கங்கள்தாம் கொண்டு சேர்த்தன. அது மட்டுமல்லாது, உள்ளூர் வளங்களைக் கொண்டு உற்பத்திகளைப் பெருக்கியதிலும் பல பணிகளை இவை ஆற்றின. யுத்த காலத்தில் கிராமப் பொருளாதாரத்தை வளர்த்து விட்டன.

இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் வகிபாகத்தினாலோ அல்லது அவை கோடானுகோடி ரூபாய்களைக் கையாளும் வலு மிகுந்த நிறுவனங்களாக இருப்பதனாலோ, இதன் தலைவர்களே பின்பு பிரதேச சபைத் தலைவர்களாகவும் சமூகத் தலைவர்களாகவும் வளருகின்றனர். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைத்துவங்களை நோக்கினால் அவை முக்காலும் ஆண் தலைமைத்துவங்களாக இருப்பதைக் காணலாம். அதில் அள்ளித் தெளித்தாற்போல் ஓரிரண்டு பெண்கள் அங்கத்துவம் வகித்தாலும் அவர்கள் வாய்பேசா ஊமைகளாகவோ அல்லது தீர்மானம் எடுக்கும் ஆளுமை அற்றவர்ாகவோ இருப்பதைக் காணலாம். இச்சங்கங்களில் சாதாரணமாகவே நடக்கும் ஊழல் பிரச்சனைகளில் பெண்கள் அனேகமாக நசிந்து கிடப்பர்.

இந்த நிலை மாறவேண்டும். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பாக வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினைத் தீர்மானிக்கும் முக்கிய நிறுவனங்களாகும். இவற்றுக்குள் பெண்களும் நுழையவேண்டும். அவை இப்போது போலல்லாது ஜனநாயகம் பொருந்திய நிறுவனங்களாக மாற வேண்டும். உள்ளூர் உற்பத்திகளை மேலும் பெருக்குவதில் இன்னும் பல மடங்கு சேவை செய்ய வேண்டும். அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று நினைக்கிறீர்கள்? எப்படிச் செய்யலாம் என்பதை எங்களுக்குத் தெரிவியுங்கள். நாங்கள் ஏனைய சகோதரிகளுக்கும் தெரிவித்து ஒன்றாக நடவடிக்கை எடுப்போம்.

படிப்பகம்

www.padippakam.com



# இலக்கியத்தில் பெண்கள் மீதான வன்முறை

# கதைத் தொடர்

எமது பாரம்பரிய இலக்கியங்களிலும் சமய இலக்கியங்களிலும் ஏராளமான சம்பவங்கள் பெண்கள் மீது எத்தகைய வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கோடு காட்டுகின்றன. நாங்கள் எல்லோரும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எங்கள் சிறு வயது முதல் வாசித்து அதனைப் பற்றி சர்வ சாதாரணமாக அளவளாவி வருவதனால்தான் அக்குற்றத்தினை ஒரு பாரதூரமான பிரச்சனையாக எடுக்காமல் அதனை அங்கீகரிப்பவர்களாக வளர்கின்றோம். பெரும்பாலான கதைகளில் அந்த நடவடிக்கைகள் கண்டிக்கப்படுவதே கிடையாது. மேலும், அவை அநேகமாக கதையின் கதாநாகனினாலோ அல்லது ஆண்டவனால் அருள் செய்யப்பட்ட ஒருவரினாலோ மேற்கொள்ளப் படுவதால் செய்யப்படுவது தவறாகாது என்ற ரீதியில் தரப்படுகின்றன. பெண்கள் மீதான வன்முறையை சமூக மயப்படுத்த உதவும் இவ்வகை யான கதைகளை இங்கு தலைவி வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

இன்று நாம் திரும்ப மகாபாரதத்திற்குச் செல்கின்றோம். கீசகனுக்கும் திரௌபதிக்கும் இடையே நடந்த சம்பவத்தை மீட்டுப் பார்ப்போம். துரியோதனன் சூதாட்டத்தில் பாண்டவர்களின் நாட்டைப் பறித்துக் கொண்டனர். பாண்டவர்கள் இது அநீதி என்று வேண்டுகோள் விடுக்கவே நாடு திரும்பக் கிடைக்க வேண்டுமென்றால் பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒரு வருடம் அஞ்ஞாதவாசமும் செய்து வரவேண்டும் என்பது ஒப்பந்தமாயிற்று. அஞ்ஞாதவாசம் என்றால் கௌரவர்கள் கண்டு பிடிக்கவே முடியாத வகையில் மாறுவேஷம் தரித்து ஒரு நாட்டில் மறைந்து வாழ்வதாகும். பன்னிரண்டு வருடங்கள் வனவாசத்தை முடித்துக் கொண்ட பாண்டவர்கள் ஒரு வருட அஞ்ஞாதவாசத்துக்குத் தயாரானார்கள்.

அவர்கள் விராட ராஜனுடைய அரண்மனையில் சேவகர்களாக வேலைக்கு அமர்ந்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர் உறவினர் என்பதே அங்குள்ள யாருக்கும் தெரியாதபடி தங்கள் தங்கள் வேலைகளைப் பார்த்துக்கொண்டு இருந்தனர். திரௌபதி அந்தப்புர ஸைரந்திரியாக விராடன் மனைவி சுதேஷ்ணைக்கு ஊழியம் செய்தாள்.

சுதேஷ்ணையின் சகோதரன் கீசகன் விராடனுடைய சேனைத் தலைவன். அவனும் அவன் குலத்தவரும் விராடனுடைய படைவீரர்களாக இருந்து விராட ராஜனுடைய பலத்தை மிகவும் பெருக்கினார்கள். மத்ஸ்ய தேசத்துக்கு உண்மையான அரசன் விராடன் அல்ல கீசகனே என்று பாமர ஜனங்கள் சொல்லி வந்தார்கள். அவனுடைய செல்வாக்கு அவ்வளவு ஓங்கியிருந்தது. அந்தக் கீசகன் திரௌபதியைக் கண்டு காமங்கொண்டு, "இவள் வேலைக்காரிதானே, இவளை எளிதில் அடையலாம் என்று எண்ணி பல தடவைகள் முயற்சித்தான். திரௌபதிக்கு உதவி செய்யவோ ஒருவரும் இருக்கவில்லை. அவர்கள் அஞ்ஞாதவாசம் செய்ததனால் பிரச்சனையை பெரிதுபடுத்தவோ கணவன்மார்களை உதவிக்கு அழைக்கவோ அவளுக்கு வழியில்லை. இதனால் "என்னை யாராவது அவமதித்தால் என்னைக் காக்கும் தேவ கந்தர்வர்கள் இரகசியமாக வதம் செய்து விடுவார்கள்" என்று அவள் தற்பாதுகாப்புக்காக அடிக்கடி எல்லோருக்கும் சொல்லி வந்தாள். வேலைக்காரி சொல்வதை யார் நம்புவார்கள்? உண்மையில் சுதேஷ்ணை தனது சகோதரனுடன் சேர்ந்து யுக்தி செய்து திரௌபதியை வலையில் சிக்க வைக்கத் தீர்மானித்தாள்.

ஒருநாள் இரவில் கீசகனுடைய வீட்டில் தயாரிக்கப்பட்ட விசேஷமான மதுபானத்தை எடுத்துவரச் சொல்லி திரௌபதிக்குக் கட்டளையிட்டாள். திரௌபதி பலவாறாக வேண்டியும் கேட்கவில்லை. அவளே போகவேண்டும் என்று சுதேஷ்ணை நின்றதால் வேறு வழியின்றிச் சென்றவளுக்கு எதிர்பார்த்த விடயமே நடந்தது. கீசகன் அவளைப் பலவந்தமாக இழுக்கவே குழறிக்கொண்டு வெளியே ஓடி ராஜசபையண்டை சென்று முறையிட்டு நின்றாள். ஆனால் கீசகனோ யாரையும் லட்சியம் செய்யாமல் "சீ தாசி" என்று சொல்லிப் பலபேரும் பார்க்க காலால் உதைத்தான். எல்லோருக்கும் அவனிடம் பயம் என்பதனால் அவனைக் கண்டிக்க ஒருவருமே முன்வரவில்லை. "எங்கே உன்னைப் பாதுகாக்கும் கந்தர்வர்கள்? காட்டு பார்ப்போம்" என்று அவன் அட்டகாசமாகச் சிரித்தான்.

இந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் திரௌபதி இரகசியமாக பீமனிடம் சென்றாள். அவர்களிருவரும் கீசகனைக் கொல்லத் திட்டம் தீட்டினர். அடுத்த நாள் அவள் கீசகனிடம் சென்று அவன் இச்சைக்கு இணங்குபவள்போல நடித்து அன்றிரவு ஒரு தனியான இடத்துக்கு வரவழைத்தாள். அங்கு கீசகனுக்குக் காத்திருந்த பீமன் அவனைக் கொன்றொழித்தான். திரௌபதி உடனே காவலாளிகளை எழுப்பி "கீசகன் என்னை இம்சிக்க வந்தான். என்னுடைய காவலர்களான கந்தர்வர்கள் அவனைக் கொன்றுவிட்டனர் பார்த்தீர்களா" என்று காட்டினாள்.

கீசக வதத்தின் பயனாக விராடனின் அரண்மனையில் எல்லோரும் திரௌபதிக்கு பயப்படத் தொடங்கினார்கள். அவளுடைய கந்தர்வர்கள் கதையை அப்படியே உண்மையென நம்பினார்கள். இதனால் சுதேஷ்ணை அவளைக் கிளம்பச் சொல்லி தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தாள். அஞ்ஞாதவாசம் முடிய இன்னும் ஒரேயொரு மாதம்தான் இருந்ததனால், இன்னும் ஒரு மாதத்துக்கு இங்கு இருக்கச் சொல்லி கந்தர்வர்கள் கட்டளையிடுகின்றார்கள் என்று அவளைப் பயமுறுத்தி திரௌபதி இன்னும் ஒரு மாதத்துக்கு இருந்து வெற்றிகரமாக அஞ்ஞாதவாசத்தை முடித்தாளாம்.

திரௌபதிக்கு அன்று "பாதுகாக்கும் கந்தர்வர்கள்" இருந்ததுபோல இன்று மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பணிப்பெண்களுக்கு ஒருவரும் இல்லை. அவர்கள் தாம் வேலை செய்கின்ற வீடுகளின் ஆண்கள் கைகளில் பல இம்சைகளை எதிர்நோக்குகின்றனர். இதில் அவர்கள் திரும்ப வந்து சொல்வது கொஞ்சம் சொல்லாதது இன்னும் எவ்வளவோ. இந்தக் கதையில் சுதேஷ்ணை நடந்து கொண்ட முறையும், திரௌபதி எல்லோர் முன்னிலையிலும் இம்சிக்கப்பட்டபோது மற்றவர்கள் நடந்துகொண்ட முறையும் நாம் கற்றுக்கொள்ள பல முக்கிய பாடங்களைத் தருகின்றன.

அதிகாரத்திலிருப்பவர்கள், அது நாடாக இருந்தால் என்ன வீடாக இருந்தால் என்ன, அநீதிகளைச் செய்வதற்கு அவர்களைச் சுற்றியுள்ளவர்கள் எவ்வாறு துணை போகின்றார்கள் என்பதற்கு சுதேக்ஷணை ஒரு நல்ல உதாரணம். இங்கு சுதேஷ்ணை தானும் ஒரு பெண்ணாக இருந்தும் இன்னொரு பெண்ணின் நிலைமையை அவள் உணரத் தயாராக இருக்கவில்லை. அதிகாரம் மனிதர்கள் கொண்டிருக்கும் நீதி நியாயம் சார்பான உணர்வுகளையே மழுங்கடிக்க வல்லது. அதனால்தான் அதிகாரத்திலிருப்பவர் அந்த ஆண்டவராக இருந்தாலும் சரி, கண்காணிக்கப்படவேண்டியவர், கண்டிக்கப்பட வேண்டியவர். இந்தக் கடமையைத்தான் முறையாக இயங்கும் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் செய்கின்றன.

அடுத்து, மனிதர்கள் கொண்ட பயம். இந்தப் பாழாய்ப்போன பயம் மனிதர்களைப் பேதைகளாகவும் கோழைகளாகவும் ஆக்கிவிடுகின்றதே ஏன்? நீதிக்காகவும் நியாயத்துக்காகவும் போராடும் ஓர் உன்னத பிறவியை விடுத்து நாம் பயந்தொடுங்கி எம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றால் எதுக்குத் தேவை இந்த உடம்பு? நாம் எதற்கு உயிர்வாழ வேண்டும்? உழைக்கவும் சாப்பிடவும் தூங்கவுமா? திரௌபதியின் கதையில் அவள் இம்சிக்கப்பட்டபோது சுற்றியிருந்தோர் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? அனேகமாக நீசர் அல்லது கோழைகள் என்று நினைத்திருப்பீர்கள். அவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தால் அவர்களைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்னவாக இருந்திருக்கும்? உயர்ந்த மனிதர்கள் என்று உங்கள் நெஞ்சில் பெருமை நிறைந்திருக்கும்.

ஆம், சகோதரிகளே. நீங்கள் யாரைப்போல் இருக்க விரும்புகிறீர்கள்? உயர்ந்த மனிதர்களாக வாழ விரும்புகிறீர்களா அல்லது நீசராக மடிய விரும்புகிறீர்களா? உயர்ந்தவர்களாக நீங்கள் வாழ்வதற்கு முதலில் பயத்தை விட்டொழிக்க வேண்டும். நியாயத்துக்காக துணிந்து நிற்க வேண்டும். எங்கோ வாசித்த ஒரு அறிஞருடைய பொன்மொழிகள் ஞாபகத்துக்கு வருகின்றன. **இந்த உலகம் கெட்டழிந்து போவது தீமை செய்யும் ஒரு சிலரினால் அல்ல. அவர்கள் செய்வதைச் செய்யவிட்டு மௌனமாகப் பார்த்து நிற்கும் ஏனைய பலரினால் தான்....**

படிப்பகம்

www.padippakam.com



உங்கள் கடிதங்கள். . . . .

## " நான் அனுப்புவது கடிதம் அல்ல... என் உள்ளம்"





## யார் தலைவி என விளங்கவில்லையாம்

ஒரு வருடத்துக்கு மேலாக தலைவி பெண்களின் வளர்ச்சிக்கு ஒரு தளமாக இருந்து வருகின்றது. இதனால் தமிழ் முஸ்லிம் பெண்களின் உறவுகளையும், உணர்வுகளையும், ஆற்றல்களையும் வளர்த்துள்ளது. பல மாவட்டப் பெண்களை ஆக்கங்கள் மூலம் தலைவி அறிமுகத்தினையும் தொடர்பினையும் உண்டுபண்ணியது. பெண்களின் பிரச்சினைக்கு முற்றுமுழுதாக தன்னை அர்ப்பணிக்கின்றது. பெண்கள் வேலைத் திட்டங்களை எப்படி முன்னெடுக்க வேண்டும் என்று கூறுகின்றது. மாவட்டப் பெண்கள் செய்கின்ற வேலைகளை உடனுக்குடன் வெளிப்படுத்துகின்றது. கிராமப் பெண்களின் பிரச்சினைகளையும் வெளிப்படுத்துகின்றது. பெண்கள் மத்தியில் வாசிப்புத் திறனையும் ஆற்றலையும் மேம்படுத்துகின்றது. பெண்களுக்கு அரசியல் அறிவையும், ஆக்கத்தையும், ஊக்கத்தையும் ஊட்டுகின்றது. ஒவ்வொரு மாதமும் தவறாது கிராமப் பெண்களைச் சந்திக்கின்றது. ஒவ்வொரு மாதமும் தலைவியை கையில் வைத்திருக்கும் பெண்கள் அனைவருமே தங்களை தலைவியாகப் பார்க்கின்ற சந்தர்ப்பத்தை உணர்வு ரீதியாக ஊட்டுகின்றது. சகல மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டு இயங்குகின்ற பெண்கள் அமைப்புக்களையும் இயங்காமல் இருக்கின்ற பெண்கள் அமைப்புக்களையும் அடையாளப் படுத்துகின்றது. பெண்கள் பிரச்சினை பற்றி ஆழ்ந்த அக்கறை கொண்டு பெண்களை இனங்காட்டுகின்றது.

இந்தத் தலைவி சஞ்சிகை பெண் சமூகத்தை இவ்வாறு வழிநடத்திக்கொண்டு போகும்போது சில இடங்களில் இந்த தலைவி யார் என்று பல கேள்விகளை கேட்பவர்களுக்கு நான் விடுக்கும் விளக்கம் என்னவென்றால் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு வெளிவந்த மாத சஞ்சிகையில் இது தொடர்பான விளக்கங்கள் தெளிவாக வெளிவந்தது. அந்த சஞ்சிகையை பார்த்திருந்தால் இதற்கான விளக்கம் கிடைத்திருக்கும். நான் ஒன்று கூற விரும்புகின்றேன். ஒரு வேலையை யார் செய்ய வேண்டும் என்று பார்ப்பதை விட செய்யக்கூடியவர்களையும் திறமைசாலிகளையும் தேடிக்கண்டு அவர்களுடைய செயற் பாட்டுக்கு ஆதரவும் ஊக்கமும் கொடுக்க வேண்டுமே தவிர அதை மழுங்கடிக்கச் செய்யும் செயற்பாட்டை ஏற்படுத்துவது தானே தனக்கு தீயினால் தலைசொறிகின்ற மாதிரி போய்விடும் என்பதை மறந்துவிடாதீர்கள். இதை நான் ஏன் எழுதுகின்றேன் என்றால் கடந்த மாதம் எனது வேலைக்காக நான் ஈச்சிலம்பற்று பிரதேசத்திற்கு சென்றிருந்தேன். அங்கு எனக்குத் தெரிந்த ஒருவர் என்னிடம், இந்த தலைவி யார் என்ற கேள்விகளை தன்னிடம் பலபேர் கேட்டதாக கூறியபோது நான் மேற்குறிப்பிட்ட பதிலையே கூறிவிட்டு இதை நான் தலைவியூடாகவும் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

இவ்வண்ணம்
சந்திரா
வாழைச்சேனை

ஆசிரியருக்கு!

பெண்களுக்காக வெளியிட்டு வரும் பத்திரிகையை நான் தொடர்ந்து வாசித்து வருகிறேன் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக வேதனைப் படுவதுண்டு. தலைவி மூலம் அவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும். ஆண்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் குழந்தைகளுடன் வாழ வழியில்லாமல் தத்தளிப்பது அதிகரித்து விட்டது.. உண்மையிலேயே பெண்கள் விழிப்படைய வேண்டும். நீதிமன்றங்களில் பெண்கள் அலைவது தவிர்க்கப்பட வேண்டும். சென்ற பத்திரிகையைப் பார்த்தபோது சகோதரி சுமதி எழுதிய கடிதத்தைப் பார்த்து பூரிப்படைந்தேன். அந்தப்பெண் ஒருவனால் திருமணம் என்ற பெயரில் தொழில், சொத்து, சொந்தங்களை இழந்து தனிமைப்படுத்தப்பட்டாள். நீதிமன்றத்திலும் அவனால் அவளுக்கு எந்தப்பலனும் அளிக்கவில்லை ஆனாலும் அவளது நம்பிக்கை, துணிச்சல், ஆர்வம் இன்று பாரதி படைத்த புதுமைப்பெண்ணாக மாற்றியுள்ளது. தன்னைப்போல் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு குழுக்கள் அமைத்து கொடுத்தும். ஆலோசனைகள் வழங்கியும் வாழ்வது பாராட்டத்தக்க விடயம் இப்படி ஆர்வம், துணிச்சல் உள்ள பெண்களுக்கு தலைவி உறுதுணையாக இருக்கவேண்டும்.

கமலா. கல்லடி

புரட்சித் தலைவியே!....

சமூகச்சீர்கேடுகளை சரித்திர ஏடுகளாகத் தொகுத்து சுவாரசியமாக எழுதிமக்கள் மத்தியில் இடம் பிடிக்க நினைக்கும் வியாபார பத்திரிகைகள் நிறைய நம் வலம் வருகிறது. ஆனால் நான் சந்தித்த தலைவி இதற்கெல்லாம் ஒரு விதிவிலக்கு இதுவே பெண் இனத்திற்கு ஒளிவிளக்கு இன்றைய சமூகத்தவர். மதம், இனம், குலம், ஆண்வர்க்கம் பெண்வர்க்கம். என எத்தனையோ அநியாயங்கள் இடம் பெறுகின்றன. இவற்றையெல்லாம் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டி அவற்றுக்கு இதுதான் தீர்வு வழியென எடுத்துக்கூறும் ஒரு பத்திரிகையாக தலைவியை நான் காண்கின்றேன் இப்பத்திரிகை மூலம் எம்.ஐ. ஸபீனா போன்ற புரட்சி எழுத்தாளர்களையும். எமக்கு அறிமுகப்படுத்தியதற்கு தலைவியே உனக்கு என் நல்லாசி என்றும்.

எஸ்.ஐ. பாறுக், ஓட்டமாவடி05

ஆசிரியருக்கு!

பெண்களுக்கென்று தலைவி எனும் தனிப்பத்திரிகை வெளிவருவதை நான் 2004-02-03 எனது சகோதரன் ஊடாக அறிந்து மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன். தலைவி எனது கரம் கிடைத்ததும் நானும் அவளது அபிமானியானேன் நான் நயினாதீவில் வசித்து வருகிறேன். தற்போது யாழ் பல்கலைக்கழக 1ம் வருட கலைப்பீட மாணவியாக எனது கல்வியை தொடர இருக்கிறேன்.

பெண்களின் திறமைகள், அவர்கள் வாழ்வில் ஏற்படும் இடையூறுகள், துன்பங்கள், அவர்களது வாழ்வை மேம்படுத்துவதற்கான கருத்துக்கள், பெண்களது விருப்பு, வெறுப்பு என பெண்கள் பற்றிய பல தரப்பட்டவிடயங்களை அறிவதற்கு வழிவகுத்த தலைவிக்கு எனது நன்றிகள்.

இவ்வாறு நல்ல நல்ல செய்திகளை சுமந்து வரும் தலைவி துன்பத்துடனும், விரக்தியுடனும் வாழும் மங்கையரின் வாழ்விற்கு அர்த்தம் கற்பித்து. நாளை அவர்கள் ஒரு சரித்திரம் படைக்க வழிகாட்டும். என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

தலைவி அபிமானி, பா.ரேணுகா. 07ம் வட்டாரம், நயினாதீவு.

குறிப்பு: செல்வி ரேணுகா உங்கள் பல்கலைக்கழக நண்பிகளையும் தலைவிக்கு அறிமுகம் செய்து அவர்களையும் செயல்வாதத்தில் ஈடுபட உதவுங்கள். (ஆர்)

தொடர்புகளுக்கு : 69, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா. அச்சிடுவோர் : ஈகுவாலிடி கிரபிக்ஸ், 315 ஜம்பெட்டா வீதி, கொழும்பு 13. தொ.பே : 2389848

படிப்பகம்